புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 7810068421,9488420449

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 195 | 20-01-2026 | செவ்வாய் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 195 | 20-01-2026 | Tuesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## “உலக அளவில் என்.டி.ஆர்.எப். வீரர்கள் மதிப்பை சம்பாதித்துள்ளனர்; பிரதமர் மோடி புகழாரம்



புதுடெல்லி, ஜன.20–
நாட்டில் புயல், வெள்ளம், நிலச்சரிவு போன்ற பேரிடர் காலங்களில் மக்களை பாதுகாப்பதற்காக, தேசிய பேரிடர் மீட்பு படை (என்.டி.ஆர்.எப்.) கடந்த 2006ம் ஆண்டு ஜனவரி 19 ந்தேதி துவங்கப்பட்டது. இதனை தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும், தேசிய பேரிடர் மீட்பு படை எழுச்சி தினம் கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு பிரதமர் மோடி என்.டி.ஆர்.எப். படையினருக்கு தன்னுடைய நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்து கொண்டார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்தியில், பேரிடர் காலங்களில் எப்போதும் முன்கள பணியாளர்களாக செயல்படுபவர்கள் என அவர்களை பாராட்டினார். அவர்கள், தனித்திறனுடன் செயல்பட்டு, சிக்கலில் இருந்து மக்களை விடுவிக்கும் பணியை திறம்பட செய்கிறார்கள். அவர்கள் மக்களை பாதுகாப்பதற்காக முயற்சிகள் எடுத்து, நிவாரணம் அளித்து, மக்களின் நம்பிக்கையையும் மீட்டெடுக்கின்றனர். இந்த தேசிய பேரிடர் மீட்பு படை எழுச்சி தினத்தில், நெருக்கடியான தருணங்களில் தீர்க்கத்துடன் முடிவெடுக்கும் ஆண் மற்றும் பெண் ஆகியோருக்கு ஆழ்ந்த பாராட்டுகளை தெரிவித்து கொள்கிறேன். நாட்டுக்கு உயர்தர சேவையை அவர்கள் வழங்குகின்றனர். பேரிடருக்கு தயாராவது மற்றும் பொறுப்புடன் செயல்படுவது என உலகளவில் என்.டி.ஆர்.எப். வீரர்கள் மதிப்பை சம்பாதித்துள்ளனர் என தெரிவித்து உள்ளார். சவாலான தருணங்களில் அயர்வின்றி பணியாற்றிய அவர்களுடைய சில புகைப்படங்களையும் அவர் பகிர்ந்து உள்ளார்.

## நிபா தொற்று எதிரொலி : பதநீர் அருந்துவதைத் தவிர்க்குமாறு தமிழ்நாடு பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தல்!!

சென்னை : மேற்கு வங்கத்தில் நிபா தொற்று பரவி வரும் நிலையில், பறவைகள், விலங்குகள் கடித்த பழங்களை உண்ண வேண்டாம் என்று தமிழக சுகாதாரத்துறை அறிவுறுத்தல் வழங்கி உள்ளது. பதநீர் அருந்துவதைத் தவிர்க்குமாறும் தமிழ்நாட்டில் நிபா தொற்று பரவல் இல்லை என்றாலும் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்றும் பொது சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

## முட்டுக்காட்டில் ரூ.525 கோடியில் அமைக்கப்பட்டு வரும் ‘கலைஞர் பன்னாட்டு மாநாடு மையம்’ கட்டுமானப் பணிகளை முதல்வர் ஆய்வு: குறித்த காலத்தில் முடிக்க அறிவுறுத்தல்

சென்னை: ஜன.20
முட்டுக்காட்டில் ரூ.525 கோடியில் அமைக்கப்பட்டு வரும் ‘கலைஞர் பன்னாட்டு மாநாடு மையம்’ கட்டுமானப் பணிகளை முதல்வர் நேரில் சென்று ஆய்வு நடத்தினார். அப்போது குறித்த காலத்தில் முடிக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். பொதுப்பணித் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு, கிழக்கு கடற்கரை சாலையில் 37.99 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.525 கோடியில் அமைக்கப் பட்டு வரும் உலகத்தரம் வாய்ந்த கலைஞர் பன்னாட்டு மாநாடு மையத்தின் கட்டுமானப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு, கிழக்கு கடற்கரை சாலையில் 37.99 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.525 கோடியில் 10,000 நபர்கள் அமரக்கூடிய அளவில் 90,384 சதுர அடி பரப்பளவில் பொருட்காட்சி அரங்கம், 5,000 நபர்கள் அமரக்கூடிய அளவில் 58,104 சதுர அடி பரப்பளவில் மாநாட்டு மண்டபம், 1,500 பார்வையாளர்கள் அமரக்கூடிய வகையில் கலையரங்கம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் 5,12,800 சதுர அடி மொத்த பரப்பளவில் கட்டப்பட்டு வரும் கலைஞர் பன்னாட்டு மாநாடு மையத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த மே 29ம்தேதி அடிக்கல் நாட்டினார்.



இந்த கலைஞர் பன்னாட்டு மாநாட்டு மையம் முழுவதும் குளிரூட்டும் வசதி மற்றும் மின் ஆக்கி வசதி, மின்தூக்கி வசதி, 1638 சீருந்துகள் மற்றும் 1700 இருச்சக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுவருகிறது. தற்பொழுது பொருட்காட்சி அரங்கம், மாநாட்டு மண்டபம் மற்றும் கலையரங்கத்தின் பார்வையாளர் மாடம், மேடைகள் அமைக்கும் பணிகள் முடிவுற்று மேற்கூரைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்துடன் வெளிப்புற பணிகளான சுற்றுச்சுவர், அணுகு சாலைகள், வாகன நிறுத்துமிடம் மற்றும் மின்விளக்கு வசதிகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2026 நவம்பர் மாதம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. இக்கட்டுமானப் பணிகளை ஆய்வு மேற்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், பணிகளை தரமாகவும், விரைவாகவும், குறித்த காலத்திற்குள் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் சினேகா, பொதுப்பணித் துறை முதன்மை தலைமை பொறியாளர் எஸ். மணிவண்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தமிழக சட்டசபை இன்று கூடுகிறது: கவர்னர் உரை நிகழ்த்துவாரா?

சென்னை, ஜன.20–
ஒவ்வொரு ஆண்டும் தமிழக சட்டசபையின் முதல் கூட்டம் கவர்னர் உரையுடன் தொடங்குவது மரபாக இருந்து வருகிறது. அந்த வகையில், இந்த ஆண்டின் முதல் சட்டசபை கூட்டம் இன்று (செவ்வாய் கிழமை) காலை 9.30 மணிக்கு கூட இருக்கிறது. இதில் பங்கேற்று உரையாற்றுவதற்காக கவர்னர் ஆர்.என்.ரவி காலை 9.10 மணிக்கு கவர்னர் மாளிகையான லோக் பவனில் இருந்து காரில் புறப்படுகிறார். காலை 9.25 மணிக்கு தலைமைச்செயலகம் வரும் அவருக்கு பேண்டு வாத்தியம் முழங்க போலீஸ் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட இருக்கிறது. கவர்னர் உரை அதனைத் தொடர்ந்து, கவர்னர் ஆர்.என்.ரவியை சபாநாயகர் மு.அப்பாவு சால்வை அணிவித்து, பூங்கொத்து கொடுத்து வரவேற்று அழைத்து செல்கிறார். சட்டசபை கூட்ட அரங்கத்திற்கு கவர்னர் ஆர்.என்.ரவி வந்ததும் சபாநாயகரின் இருக்கைக்கு செல்வார். அவருடைய வலதுபுறம் சபாநாயகரும், இடது புறம் கவர்னரின் செயலாளரும் அமரும் வகையில் இருக்கை போடப்பட்டு இருக்கும். சரியாக, காலை 9.30 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும். அதனைத் தொடர்ந்து, கவர்னர் ஆர்.என்.ரவி உரை நிகழ்த்த தொடங்குவார். அவரது உரையில் தமிழக அரசின் செயல்பாடுகள், கொள்கை, சாதனைகள் இடம்பெற்றிருக்கும். முறையாக நிகழ்த்துவாரா? கவர்னர் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தி முடித்ததும், அந்த உரையை தமிழில் சபாநாயகர் அப்பாவு வாசிப்பார். அத்துடன் அன்றைய கூட்டம் நிறைவடையும். தொடர்ந்து, அலுவல் ஆய்வுக்குழு கூட்டம் நடைபெறும். இந்தக் கூட்டத்தில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தை எத்தனை நாட்கள் நடத்துவது? என்பது குறித்து விவாதித்து முடிவெடுக்கப்படும். அனேகமாக, வரும் 23ந் தேதி (வெள்ளிக்கிழமை) வரை சட்டசபை கூட்டம் நடைபெறும் என தெரிகிறது. அதே நேரத்தில், இன்றைய கூட்டத்தில் கவர்னர் தனது உரையை முறையாக நிகழ்த்துவாரா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. 2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழக கவர்னராக ஆர்.என்.ரவி நியமிக்கப்பட்டார். உறவில் விரிசல் அவர் 2022ம் ஆண்டு முதன்முதலில் தமிழக சட்டசபையில் உரை நிகழ்த்தினார். அந்த உரையை மட்டும்தான் அவர் முழுமையாக வாசித்தார். அதன் பிறகு, தமிழக அரசுக்கும், கவர்னருக்கும் இடையே உள்ள உறவில் விரிசல் ஏற்பட்டதால், தனது உரையை அவர் முழுமையாக வாசிக்கவில்லை. 2023ம் ஆண்டு சட்டசபை முதல் கூட்டத்தில் கவர்னர் ஆர்.என்.ரவி உரையாற்றியபோது, மகளிர் முன்னேற்றம், மதச்சார்பின்மை, சுயமரியாதை, பெரியார், அம்பேத்கார், கலைஞர் ஆகிய வார்த்தைகளை அவர் படிக்கவில்லை. ஆனால், தமிழக அரசு உரையில் அந்த வார்த்தைகள் இடம்பெறும் என்று முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவையில் கூறியதால், கவர்னர் பாதியிலேயே வெளியேறினார். கேள்விக்குறி 2024ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபையின் முதல் கூட்டத்தில், தமிழ்த்தாய் வாழ்த்தை தொடர்ந்து தேசிய கீதம் பாடப்படவில்லை என்று கூறி, கவர்னர் உரையை வாசிக்காமல் கவர்னர் ஆர்.என்.ரவி வெளியேறினார். ஆனால், தமிழில் அந்த உரையை சபாநாயகர் அப்பாவு வாசிக்க, அது அவைக்குறிப்பில் ஏற்றப்பட்டது. கடந்த ஆண்டு (2025) ஜனவரி 6ந் தேதி கூடிய தமிழக சட்டசபை முதல் கூட்டத்திலும் தேசிய கீதம் பாடப்படாததை சுட்டிக்காட்டி கவர்னர் ஆர்.என்.ரவி வெளியேறினார். இப்படி கவர்னர் உரையை தொடர்ந்து புறக்கணித்து வரும் கவர்னர் ஆர்.என். ரவி, இன்றைய சட்டசபை கூட்டத்தில் முறையாக வாசிப்பாரா? என்பது கேள்விக்குறிதான். “,

## குடியரசு தின விழாவை முன்னிட்டு சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு அமல்: வரும் 30ம் தேதி வரை தீவிர சோதனை

சென்னை: ஜன.20–
குடியரசு தின விழாவை முன்னிட்டு சென்னை விமான நிலையத்தில் கூடுதல் பாதுகாப்பாக, 5 அடுக்கு பாதுகாப்பு முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாதுகாப்பு வரும் 30ம் தேதி நள்ளிரவு வரை அமலில் இருக்கும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. பயணிகளுக்கு கூடுதலாக பாதுகாப்பு சோதனைகள் நடத்தப்படுவதால் முன்னதாகவே விமான நிலையத்திற்கு வரும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.



இந்தியாவின் குடியரசு தின விழா, வரும் 26ம் தேதி நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. இதையடுத்து நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதுபோல் சென்னை விமானநிலையத்திலும், பாதுகாப்பு ஏற்பாடு அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 5 அடுக்கு பாதுகாப்பு முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த 5 அடுக்கு பாதுகாப்பு முறை வருகின்ற 30ம் தேதி நள்ளிரவு வரை அமலில் இருக்கும் என்றும், அதோடு 24, 25, 26 ஆகிய 3 நாட்கள் உச்சக்கட்ட பாதுகாப்பாக, 7 அடுக்கு பாதுகாப்பு முறை அமல்படுத்தப்பட உள்ளது என்றும் கூறப்படுகிறது.

சென்னை விமானநிலையத்திற்கு வரும் வாகனங்களை பிரதான நுழைவு கேட் பகுதியிலேயே நிறுத்தி சந்தேகப்படும் வாகனங்களை பாதுகாப்பு படையினர் மோப்ப நாய் உதவியுடன் சோதனை செய்கின்றனர். அதைபோல் வெடிகுண்டு நிபுணர்கள் மெட்டல் டிடெக்டர் மூலம் பரிசோதிக்கின்றனர். விமானநிலைய வளாகத்தில் துப்பாக்கி ஏந்திய போலீசார் ரோந்து வந்து, தொடர்ந்து கண்காணிக்கின்றனர்.

மேலும் விமானநிலைய மல்டி லெவல் கார் பார்க்கிங்கிற்குள் நீண்ட நேரமாக நிற்கும் கார்கள், பைக்குகள் போன்ற வாகனங்களை வெடிகுண்டு நிபுணர்கள் தீவிரமாக சோதனையிட்டு கண்காணிக்கின்றனர். மேலும், மத்திய தொழில் பாதுகாப்பு படையினரின் அதிரடி வீரர்கள் மோப்ப நாய்களுடன் சென்னை விமான நிலையத்தின் அனைத்து பகுதிகளுக்கும் குறிப்பாக, விமானங்கள் நிற்கும் பகுதிகளிலும் தீவிரமாக சோதனையிட்டு கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். BCAS பாஸ்கள் வழங்குவதிலும், கடுமையான கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டுள்ளன.

விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் பகுதிகளில், கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அப்பகுதியில் ஏற்கனவே உள்ள சிசிடிவி கேமராக்களுடன் தற்போது கூடுதலாக சிசிடிவி கேமராக்களை அமைத்து, விமான நிலைய பாதுகாப்பு கட்டுப்பாட்டு அறையிலிருந்து 24 மணி நேரமும் தொடர்ந்து கண்காணிக்கின்றனர். அதுபோல் விமான பயணிகளுக்கும், பாதுகாப்பு சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பயணிகளுக்கு வழக்கமாக நடக்கும் சோதனைகளுடன் மேலும் ஒருமுறை, விமானங்களுக்குள் உள்ளே செல்லும் இடத்தில் பாதுகாப்பு சோதனைகள் நடத்தப்படுகிறது.

குறிப்பாக பயணிகள் கைகளில் எடுத்து வரும் கைப்பைகளை துருவி துருவி சோதிக்கின்றனர். பயணிகள் திரவப்பொருட்கள், ஊறுகாய், அல்வா, ஜாம், எண்ணெய் பாட்டில்கள் போன்ற பொருட்கள் எடுத்து செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளன. விமானங்களில் சரக்கு பார்சல்கள் ஏற்றும் பகுதிகளிலும் தீவிரமாக கண்காணித்து, பார்சல்கள் அனைத்தையும் பலகட்ட சோதனைக்கு பின்பே விமானங்களில் ஏற்ற அனுமதிக்கின்றனர்.

விமான பயணிகளுக்கு கூடுதலாக சோதனைகள் நடத்தப்படுவதால், உள்நாட்டு பயணிகள், விமானம் புறப்படும் நேரத்திற்கு ஒன்றரை மணி நேரம் முன்னதாகவும், சர்வதேச பயணிகள் மூன்றரை மணி நேரத்திற்கு முன்னதாகவும் வருவதற்கு சென்னை விமானநிலைய அதிகாரிகள் பயணிகளை அறிவுறுத்தியுள்ளனர். சென்னை விமானநிலையம் முழு பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டாலும், விமானங்கள் அனைத்தும் வழக்கம் போல் இயங்குகின்றன. எனவே பயணிகள் அச்சமின்றி, வழக்கம்போல் அனைத்து விமானங்களிலும் பயணம் மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் பயனாளிக்கு அரசு நலத்திட்ட உதவியினை வழங்கினார்.

## விழுப்புரம் மாவட்டம் பிரசித்தி பெற்ற மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் தை மாதம் அமாவாசை முன்னிட்டு ஊஞ்சல் உற்சவம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம்



விழுப்புரம், ஜன.20–
விழுப்புரம் மாவட்டம் உலக பிரசித்தி பெற்ற மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் தை மாதம் அமாவாசையை முன்னிட்டு ஊஞ்சல் உற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

தை மாதம் அமாவாசை முன்னிட்டு அதிகாலை முதலே நடை திறக்கப்பட்டு மூலவர் மற்றும் உற்சவர் அங்காளம்மனுக்கு பால் தயிர் பன்னீர் சந்தனம் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டு அபிஷேகம் செய்யப்பட்டது.

அதன் பின் வண்ண மலர்கள் , தங்க கவச அலங்காரம் செய்து சர்க்கரை பொங்கல், சுண்டல் பல்வேறு வகையான பழங்களை கொண்டு நெய்வேத்தியமும் அதனைத் தொடர்ந்து தீபாராதனையும் நடைபெற்றது.

அதன்பின் நீண்ட நெடு வரிசையில் காத்துக் கொண்டிருந்த பக்தர்கள் சாமி தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர்.

உற்சவர் அங்காளம்மன் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். நாள் முழுவதும் திரளான பக்தர்கள் சாமி தரிசனம் செய்துவந்திருந்தநிலையில் இரவு பதினோரு மணிக்கு மேல் பூசாரிகள் வழக்கப்படி உற்சவர் அங்காளம்மன் பிரத்தியேகமாக அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சல் மண்டபத்திற்கு கொண்டுவரப்பட்டு பூசாரிகள் வழக்கப்படி தாலாட்டு பாடி தீபாரதனை எடுத்து ஊஞ்சல் உற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

நாள் முழுவதும் விரதம் இருந்து ஊஞ்சல் உற்சவம் காண வேண்டி பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கையில் தீபம் ஏந்தி ஓம் சக்தி அங்காளம்மா என்ற கோஷத்துடன் அங்காளம்மனை தரிசனம் செய்தனர்.

இந்து சமய அறநிலையத்துறை மற்றும் கோவில் நிர்வாகம் சார்பில் கூட்ட நெரிசலை தவிர்க்க தடுப்பணைகள் மற்றும் விழுப்புரம் மாவட்ட கண்காணிப்பாளர் சரவணன் தலைமையில் 600 க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். கழிப்பறை , குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இதில் கோவில் உதவி ஆணையர் சக்திவேல் மற்றும் அறங்காவலர் குழு தலைவர் சேட்டு என்கிற ஏழுமலை பூசாரி மற்றும் பிற அறங்காவலர்கள் ஊஞ்சல் உற்சவத்தில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கான முகாம் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் ஜன 20 :
திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு Artificial Limbs Manufacturing corpora tion of India, (ALIMCO) Auxiliary production Centre வாயிலாக மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, ஊன்றுகோல்கள் ,மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்பு சக்கர நாற்காலி, வடிவமைக்கப்பட்ட கால் தாங்கிகள் 6. வடிவமைக்கப்பட்ட செயற்கை அவயங்கள், காதுக்கு பின்னால் அணியும் காதொலி கருவிகள், ரோலேட்டர் ஆகிய உதவி உபகரணங்கள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கான உபகரணங்கள், கமோட் வீல்சேர் , முழங்கால் பிரேஸ், வாக்கர் ,நடை உபகரணம் தேவைப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கு அளவீட்டு முகாம் நடைபெறவுள்ளது. மேற்படி திருவள்ளூர் மாவட்டத்தில் 3 ஆண்டுகளுக்குள் உபகரணங்கள் பெறப்படாத மாற்றுத்திறனாளிகளாக இருத்தல் வேண்டும்.

21.01.2026 திருத்தணி, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி திருத்தணியில் காலை 9 மணி முதல் 1 மணி வரை, 22.01.2026 பூந்தமல்லியில், அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளி, பூந்தமல்லி காலை 9 மணி முதல் 1 மணி வரை, 23.01.2026 கும்மிடிப்பூண்டியில், அரசு மேல்நிலைப்பள்ளி கவரைப்பேட்டை காலை 9 மணி முதல் 1 மணி வரை, 24.01.2026 திருவள்ளூரில் மாற்றுத்திறனாளிகளுக்கான மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டரங்கம் திருவள்ளூர் காலை 9 மணி முதல் 1 மணி வரை.

மேற்படி முகாமிற்கு வரும் மாற்றுத்திறனாளிகள் அசல் மற்றும் நகலான மாற்றுத்திறனாளிகளுக்கான, UDID அட்டை 40% மேல் உள்ளவர்கள், ஆதார் அட்டை, குடும்ப அட்டை அல்லது வருமானச்சான்று, Passport size photo - 2 மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு UDID அட்டை தவிர்த்து மேற்கண்ட சான்றுகளுடன் அளவீட்டு முகாம்களில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் பிரதாப் தெரிவித்துள்ளார்.

## மாம்பட்டு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் தை அமாவாசை ஊஞ்சல் தாலாட்டு வைபவம்...!



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த மாம்பட்டு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலில் தை அமாவாசை ஊஞ்சல் தாலாட்டு வைபவம் மற்றும் சிறப்பு பூஜைகள் வெகு விமரிசையாக நடைபெற்றது. மூல மூர்த்தி அம்மனுக்கு வாசனை திரவியங்கள் கொண்டு விசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. பிறகு அருட்சக்தி ஆறு. லட்சுமணன் ஸ்வாமிகள் மேற்பார்வையில் யாகசாலை பூஜை நடந்தேறியது . இரவு உற்சவ மூர்த்தி அம்மனுக்கு ஊஞ்சல் தாலாட்டு வைபவம் நடைபெற்று மேளதாளத்துடன் கோயில் பிரகாரத்தில் பவனி வந்தனர். இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

# சேலம் மக்களே உஷார் இன்று மின்தடை ஏரியா லிஸ்ட் இதோ

சேலம் மாவட்டத்தில் எடப்பாடி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள துணைமின்நிலையங்களில் மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளதால், இன்று 20.01.2026 (செவ்வாய்க் கிழமை) இன்று மின் விநியோகம் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எடப்பாடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள்: கொங்கணாபுரம், ரங்கம்பாளையம், ராக்கியாம்பட்டி, மடத்தூர், எருமப்பட்டி, மூலப்பாதை (ஒரு பகுதி), மற்றும் தூங்கனூர்.

வெள்ளக்கல்பட்டி, ரெட்டிப்பட்டி, காட்டூர், காவடிக்காரனூர், இ.கே.வலவு, அம்மன் காட்டூர், மற்றும் ஆலாக்காட்டூர்.

ஆடையூர் துணை மின் நிலையப் பகுதி: ஓட்டப்பட்டி, குண்டானூர், செட்டிமாங்குறிச்சி, அம்மன் கோவில், இருப்பாலி, மற்றும் பக்கநாடு.

ஆடையூர் (ஒரு பகுதி), அடுவாப்பட்டி, ஆனைப்பள்ளம், கல்லுரரல்காடு, மற்றும் குண்டுமலைக்காடு.

ஜலகண்டாபுரம் துணை மின்நிலையப் பகுதி: வங்காலியூர், தோரமங்கலம், கரிக்காப்பட்டி, கருணை நகர், காப்பரத்தாம்பட்டி, டி.தோரமங்கலம், குட்டி கண்ணன் தெரு, நரியம்பட்டி, மற்றும் தாசனூர், காளியம்மன் கோவில், நேரு நகர், நாச்சம்பட்டி, செலவடை மேடு, செலவடை, வெண்ணானம்பட்டி, காட்டம்பட்டி, இந்திரா நகர், பனங்காட்டூர், பழக்காரனூர், நொரச்சிவலவு, வைரன் ஏரி மற்றும் மலையம்பாளையம் காட்டுவலவு (ஒரு பகுதி).

பராமரிப்புப் பணிகள் முடிவடைந்தவுடன் மாலை 5:00 மணிக்கு மேல் மின் விநியோகம் மீண்டும் சீராகும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே பொதுமக்கள் இந்த மின் மாற்றத்திற்குத் தகுந்தவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மின்தடை நேரத்தில் செய்ய வேண்டியவை

மின்தடை காலங்களில் தகவல்களைப் பெறுவது மிகவும் முக்கியம். மின்சாரம் மீண்டும் வழங்கப்படும் நிலை மற்றும் அவசர அறிவிப்புகள் குறித்து தெரிந்துகொள்ள, குடியிருப்போர் பேட்டரி சக்தியில் இயங்கும் வானொலிகள் அல்லது முழுமையாக சார்ஜ் செய்யப்பட்ட மொபைல் போன்களை பயன்படுத்த வேண்டும். மொபைல் பேட்டரி ஆயுளை பாதுகாக்க, பவர் சேவிங் மோடினை இயக்கி, அவசர அழைப்புகள் மற்றும் குறுந்தகவல்கள் போன்ற தேவையான பயன்பாட்டிற்கு மட்டுமே போனைக் கொண்டு செயல்படுவது நல்லது.

மின்சார நிறுத்தம்

மின்சார நிறுத்தம் (power outage) என்பது மின்சாரம் வழங்கும் அமைப்புகளால் மின்மாற்றிகள் அல்லது மின் பாதைகளில் பணிகளைச் செய்வதற்காக அந்த மின்சாரப் பயன்பாட்டிலுள்ள இடங்களுக்கு குறிப்பிட்ட நேரங்களில் மின்சாரம் வழங்காமல் இருப்பதைக் குறிப்பிடுகிறது. சில வேளைகளில் மின் பற்றாக்குறை போன்ற சில காரணங்களினாலும் மின்சாரம் நிறுத்தம் செய்யப்படுகிறது. பற்றாக்குறை காரணமாகச் செய்யப்படும் மின்சார நிறுத்தம் மின்வெட்டு என்று குறிப்பிடப்படுகிறது.

துணை மின் நிலையங்களில் பராமரிப்பு பணிகள் காரணமாக மின்சாரம் நிறுத்தப்படலாம். குறிப்பாக, மாதாந்திர பராமரிப்பு பணிகள் மற்றும் பிரேக்கர்கள், பவர் டிரான்ஸ்பார்மர், பேட்டரிகள் போன்றவற்றை பராமரிக்க மின்வாரியம் நடவடிக்கை எடுக்கும்போது மின் தடை ஏற்படலாம்.

துணை மின் நிலைய சேவைகளை ஆதரித்தல்

துணை மின்நிலைய பழுது மற்றும் பராமரிப்பு

துணை மின்நிலைய சோதனை – செயல்பாட்டுக்குக் கொண்டுவருதல்

துணை மின் நிலைய ஆட்டோமேஷன் அமைப்பு சோதனை மற்றும் ஆணையிடுதல்

மின்மாற்றி பழுதுபார்ப்பு – சேவை

தொழிற்சாலை சர்க்யூட் பிரேக்கர் பழுதுபார்ப்பு

பாதுகாப்பு சோதனை

இரண்டாம் நிலை துணை மின்நிலைய சோதனை.

# அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் தைத் திருநாள் பொங்கலை சிறப்பிக்கும் வகையில் பொங்கல் கலை விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றது.



அரியலூர். ஜன.20–
அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தில் கலைப் பண்பாட்டுத் துறை, திருச்சி மண்டலம் சார்பில் தைத்திருநாள் பொங்கலை சிறப்பிக்கும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் 15.01.2026 மற்றும் 16.01.2026 ஆகிய இரண்டு நாட்களிலும் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாட்டின் பாரம்பரிய பெருவிழாவாகத் திகழும் தைத் திருநாள் பொங்கலை சிறப்பிக்கும் வகையில் பொதுமக்கள் அனைவரும் ஒன்று கூடி மகிழ்ந்து கொண்டாடும் நோக்குடன் தமிழ்நாடு அரசின் கலை பண்பாட்டுத்துறையால் சென்னையில் சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா நடத்தப்படுவது போன்று ஏனைய 37 மாவட்டங்களில் பொங்கல் கலை விழா நடைபெற்றது. அந்த வகையில் அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தில் பொங்கல் பண்டிகையின் உண்மையான பண்பாட்டுச் சிறப்புகளை இளைய தலைமுறைக்கு அறிமுகம் படுத்துவதோடு பொங்கல் விடுமுறையை மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் கொண்டாடும் வகையிலும், கிராமிய வாழ்வியல், விவசாய மரபு, பாரம்பரிய உணவுகள் மற்றும் பழக்க வழக்கங்களை நினைவூட்டும் வகையிலும் 15.01.2026 மற்றும் 16.01.2026 ஆகிய இரண்டு நாட்களிலும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

அதன்படி கங்கைகொண்ட சோழபுரத்தில் 15.01.2026 அன்றையதினம் மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை ஸ்ரீ அம்மன் கிராமிய கலைக்குழுவினரின் தப்பாட்டம், கிராமிய தென்றல் கலைக்குழுவினரின் கிராமிய ஆடல் பாடல், வினித் வீரமணி கரகாட்ட கலைக்குழுவினரின் நையாண்டி மேளம், சின்மையா கலைக்குழுவினரின் பரதநாட்டியம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளும், மேலும், 16.01.2026 அன்றையதினம் பொங்கல் கலைவிழா நிகழ்ச்சிகளாக சலங்கை நாதம் கலைக்குழுவினரின் தப்பாட்டம், சங்கீத சாரல் பேண்ட்டு இசைக்குழுவினரின் பேண்ட்டு இசை, வி.பி.செல்லதுரை கலைக்கூடத்தினரின் பரதநாட்டியம், கருணாநிதி கலைக்குழுவினரின் நாடகம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. தமிழர் பண்பாட்டின் அடையாளமாக திகழும் பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடனும் உற்சாகமாக கொண்டாடும் வகையில் இரண்டு நாட்கள் சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்ச்சியினை ஏராளமான பொதுமக்கள் கண்டுகளித்தனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி, தெரிவித்துள்ளார்.

## திருப்பரங்குன்றத்தில் தெப்பத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்

திருப்பரங்குன்றம்: திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தெப்பத் திருவிழா திங்கள்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கியது. முருகனின் அறு படை வீடுகளில் முதற்படை வீடான திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஆண்டுதோறும் தை மாதத்தில் 10 நாட்கள் தெப்பத் திருவிழா கோலாகலமாக கொண்டாடப்படுவது வழக்கம்.

இந்த ஆண்டுக்கான விழா திங்கள்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்கியது. கோயிலின் கம்பத்தடி மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது உற்சவர் சன்னதியில் இருந்து சிறப்பு அலங்காரத்தில் சுப்பிரமணிய சுவாமி தெய்வானையுடன் கம்பத்தடி மண்டபத்தில் எழுந்தருளினார்.

அங்கு தங்கமுலாம் பூசப்பட்ட கம்பத்தில் அபிஷேகம் செய்யப்பட்டு, தர்ப்பை புல், மா இலை, பூக்கள் கொண்டு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, காலை 7 மணிக்கு கொடியேற்றம் நடைபெற்றது. விழாவினையொட்டி சுப்பிரமணிய சுவாமி தெய்வானையுடன் தினமும் காலையில் தங்க சப்பரத்திலும், இரவு தங்கமயில் வாகனம், அன்ன வாகனம், பச்சை குதிரை வாகனம் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார்.

விழாவில் முக்கிய நிகழ்ச்சியாக 27 ஆம் தேதி தேதி தைக்கார்த்திகை தினத்தில் தெப்பம் முட்டுத்தள்ளுதல் நிகழ்ச்சியும், தொடர்ந்து 16 கால்மண்டபம் வளாகத்தில் இருந்து நகரின் முக்கிய ரத வீதிகளில் தேரோட்டமும் நடக்கிறது. விழாவின் சிகர நிகழ்ச்சியாக 28 ஆம் தேதி ஜி.எஸ்.டி சாலையில் உள்ள தெப்பக்குளத்தில் தெப்ப உற்சவம் நடக்கிறது. அன்று காலை தெப்ப மிதவையில் சுப்பிரமணிய சுவாமி தெய்வானையுடன் எழுந்தருளி தெப்பகுளத்தை வலம் வந்து அருள்பாலிக்கிறார்.

தொடர்ந்து அன்று இரவு தெப்பக்குளத்தில் மைய மண்டபத்தில் பத்தி உலா நிகழ்ச்சியும், தொடர்ந்து மின்னொளியில் மீண்டும் தெப்ப மிதவையில் தெய்வானையுடன் சுப்பிரமணிய சுவாமி தெப்பக்குளத்தை வலம் வந்து அருள்பாலிக்க உள்ளார். விழா ஏற்பாடுகளை கோயில் அறங்காவலர் குழு தலைவர் ப.சத்யபிரியா பாலாஜி, அறங்காவலர்கள் வ. சண்முகசுந்தரம், மணிச்செல்வம், பொம்மத்தேவன், ராமையா மற்றும் கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

## வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க ஜனவரி 30ம் தேதி வரை அவகாசம் அளித்து தேர்தல் ஆணையம் உத்தரவு

சென்னை: ஜன.20–
வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க நேற்று வரை 13 லட்சம் பேர் விண்ணபித்துள்ளனர். வாக்காளர் பட்டியலில் இருந்து 97 லட்சம் பேர் நீக்கப்பட்ட நிலையில் பெயர் சேர்க்க அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க இதுவரை 13,03,487 பேர் படிவம் 6,6ஏ சமர்ப்பித்துள்ளனர். வரைவு வாக்காளர் பட்டியலில் ஆட்சேபனை குறித்த படிவம் 7ஐ 35,646 பேர் சமர்ப்பித்துள்ளனர்

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை தொடர்ந்து வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் 97.37 லட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டன. இதன்படி, உயிரிழந்த வாக்காளர்கள் 26,95,672 பேர், இடம்பெயர்ந்தோர் மற்றும் குறிப்பிட்ட முகவரியில் வசிக்காத 66,44,881 பேர், இரட்டை பதிவு வாக்காளர்கள் 3,98,278 பேர் என மொத்தம் 97 லட்சத்து 37 ஆயிரத்து 831 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, பொதுமக்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க டிச.19ம் தேதி முதல் ஜன 18ம் தேதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. இதன்படி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது. மேலும் நான்கு நாட்கள் சிறப்பு முகாம்களும் நடைபெற்றது.

தற்போது வரை 12,80,668 லட்சம் பேர் மட்டுமே வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க விண்ணப்பங்களை சமர்ப்பித்து உள்ளனர். நிரந்தரமாக இடம் பெயர்ந்தவர்கள் என்று சுமார் 66 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட நிலையில் தற்போது வரை 12.80 லட்சம் பேர் மட்டுமே வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப் பங்களை சமர்ப்பித் துள்ளனர். இதன்படி பார்த்தால் இன்னும் 53.65 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பிக்க வில்லை.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்கம் உள்ளிட்ட திருத்தப் பணிகள் நேற்றுடன் நிறைவடைந் தது. பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஜனவரி 30ம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க அவகாசம் அளித்து தேர்தல் ஆணையம் உத்தரவு அளித்துள்ளது. பிப்.17 ஆம் தேதி தமிழ்நாட்டில் இறுதி பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிடுகிறது.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# திருவள்ளூர் மாவட்ட அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட கிராம ஊராட்சிகளில் குடியரசு தினத்தை முன்னிட்டு கிராம சபைக் கூட்டம்

## மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் ஜன 20 :

திருவள்ளூர் மாவட்ட அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் குடியரசு தினத்தை முன்னிட்டு 26.01.2026 அன்று கிராம சபைக் கூட்டம் காலை 11 மணியளவில் நடைபெற உள்ளது. குடியரசு தினத்தை முன்னிட்டு நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல், கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை ஒப்புதல் பெறுதல், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், மக்கள் திட்டமிடல் இயக்கம் மூலம் 2026 27 ஆம் நிதியாண்டிற்கான



கிராம வளர்ச்சி திட்டத்திற்கு ஒப்புதல் பெறுதல், தொழிலாளர் வரவு ரூ செலவு திட்டப்பணிகள் குறித்து விவாதித்தல், நலிவு நிலை குறைப்பு நிதி தொடர்பான திட்டம் குறித்து விவாதித்தல், தூய்மை பாரத இயக்க(ஊரகம்) திட்டம் குறித்து விவாதித்தல், ஜல் ஜீவன் திட்டம் குறித்து விவாதித்தல், சிறு பாசன ஏரிகள் புதுப்பித்தல் பணிகள் தொடர்பாக விவாதித்தல், தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இதர பொருட்கள் தொடர்பாக கூட்டத்தில் விவாதிக்கப்படும்.

இந்த கிராம சபைக் கூட்டங்களில் அவ்வூராட்சியில் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து வாக்காளர்களும் கலந்து கொள்வது முக்கிய கடமையாகும். மேலும், கிராம சபைக்கூட்ட விவாதங்களில் பங்கேற்று, பயனாளிகள் தேர்வு மற்றும் அரசால் நிறைவேற்றப்படும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ள வேண்டும். எனவே மேற்படி கிராம சபைக் கூட்டத்தில் பொதுமக்கள் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.



அரியலூர் மாவட்டம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி, தலைமையில் நடைபெற்றது. அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், "மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்";; மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி, தலைமையில் (19.01.2026) நடைபெற்றது. இக்கூட்டத்தில், முதியோர் உதவித் தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, தொழில்கடன், பசுமை வீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 220 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட நிலை அலுவலர்கள் மற்றும் அனைத்துதுறை அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# இன்று முதல் சத்துணவு ஊழியர்கள் போராட்டம்

சென்னை, ஜன.20–

தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவ மாணவிகளுக்காக சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் ஒருலட்சத்திற்கு மேற்பட்ட சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில், சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் என பல்லாயிரக் கணக்கான பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில், தமிழக சத்துணவுத் துறையில் 65 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாகபல ஆண்டுகளாக உள்ளன. தமிழகத்தில் ஒரே இடத்தில் சமைத்து இரண்டு, மூன்று மையங்களுக்கு உணவு வழங்கும் நடைமுறையும் உள்ளது. இதனால், சத்துணவுப்பணியாளர்கள் கடும் மன உளைச்சலில் உள்ளனர். அண்மைக் காலமாகவே சத்துணவு ஊழியர்கள் தங்களின் கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் அரசு ஊழியர்கள், ஒப்பந்த ஊழியர்கள் உள்ளிட்டோரும் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இது தமிழக அரசியல் வட்டாரங்களில் பேசு பொருளாக உருவெடுத்தது. குறிப்பாக தூய்மைபணியாளர்களின் பணி நிரந்தர போராட்டம் தமிழகத்தில் பெரும் கவனத்தை ஈர்த்தது. இதையடுத்து பழைய ஓய்வூதியத் திட்டம், பணி நிரந்தரம், ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து ஜாக்டோ ஜியோ சங்கங்கள் உள்ளிட்ட சங்கங்கள் போராட்டங்களை நடத்தின. திமுக அரசின் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரி இந்த போராட்டங்கள் நடைபெற்றது அவர்களின் கோரிக்கைக்கு அரசு செவிசாய்த்தது. இந்தநிலையில், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தினர் வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் , குடும்ப பாதுகாப்புடன் கூடிய குறைந்தபட்ச ஓய்வூதியமாக 7 ஆயிரத்து 850 ரூபாய் வழங்க வேண்டும், பணிக்கொடையாக 5 லட்ச ரூபாய் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். அண்மையில், பகுதி நேர ஆசிரியர் மற்றும் இடைக்கால ஆசிரியர்களின் கோரிக்கைகளை ஏற்று தமிழக அரசு சில அறிவிப்புகளை வெளியிட்டது. ஆனால், சத்துணவு ஊழியர்களுக்கு எந்த விதமான அறிவுப்புகளும் வெளியாக இல்லை. இதனால், அவர்கள் மன வேதனையில் உள்ளனர். தமிழ்நாடு அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததால் நாளை முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட சத்துணவு ஊழியர்கள் முடிவு செய்துள்ளனர். காலமுறை ஊதிய உயர்வு, பணிக்கொடை உயர்வு, ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் 71,000 பேர் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த சூழலில் சத்துணவு ஊழியர்களின் போராட்ட அறிவிப்பால் பள்ளி மாணவ, மாணவிகள் பெரிதும் பாதிக்கப்பட உள்ளனர். எனவே, அரசு உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.",

# ரூ.1 கோடி மான நஷ்ட ஈடு கேட்டு எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக மனு

சென்னை : ஜன.20–

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக ரூ.1 கோடி மான நஷ்ட ஈடு கேட்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சி.பழனிசாமி மனு அளித்துள்ளார். கே.சி.பழனிசாமி தாக்கல் செய்த மனுவுக்கு அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி பதிலளிக்க ஐகோர்ட் ஆணை பிறப்பித்துள்ளது.

எடப்பாடி பழனிசாமி பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கின் விசாரணை பிப்ரவரி 13ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## நதிநீர் இணைப்புக்கு முன்னோடி..

# காலிங்கராயர் திருவுருவ சிலைக்கு ஈரோடு ஆட்சியர் மாலை அணிவித்து மரியாதை..

ஈரோடு. ஜன. 20

ஈரோடு மாவட்டத்தில் நதிகள் இணைப்பதற்கு அயராது பாடுபட்ட காலிங்கராயர் தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவ சிலைக்கு ஈரோடு மாவட்ட நிர்வாகம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

ஈரோடு மாவட்டம் பவானி காலிங்கராயன் அணைக்கட்டு பகுதியில் உள்ள, காலிங்கராயன் மணிமண்டபத்தில் நேற்று தை ஐந்தாம் தேதி காலிங்கராயர் தினத்தை முன்னிட்டு, நதிநீர் இணைப்புக்கு முன்னோடி என போற்றப்படும் காலிங்கராயர் திருஉருவ சிலைக்கு ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

ஈரோடு மாவட்டம் வெள்ளோடு கனகபுரத்தில் பிறந்த காலிங்கராயர் அவர்கள் பவானி ஆற்றில் குறுக்கே பாளையத்தில் இருந்து, ஆவுடையார் பாறை வரை சுமார் ஏறத்தாழ 57 கிலோ மீட்டர் தூரத்திற்கு தடுப்பணை கட்டி கிபி 1282 ஆம் ஆண்டு தை ஐந்தாம் நாள் தான்



உருவாக்கி கட்டிய அணைக்கட்டையும், வாய்க்காலையும் உழவுக்கு அர்ப்பணித்ததால் அந்த நாள் தை ஐந்தாம் தேதி காலிங்கராயர் தினமாக கொண்டாடப்படுகிறது.

பவானி, நொய்யல், அமராவதி ஆகிய ஆறுகளில் தான் வெட்டிய கால்வாயின் மூலம் இணைக்க காளிங்கராயர் அவர்கள் முன்னெடுத்தார். 13ம் நூற்றாண்டில் நதிநீர் இணைப்பிற்கு வித்திட்டவர் காலிங்கராயர் அவர்கள்.

மேலும் காலிங்கராயர் அவர்களால் அமைக்கப்பட்ட காளிங்கராயர் அணைக்கட்டு பகுதியில் உள்ள காலிங்கராயர் மணி மண்டபத்தில் அண்ணாரது திருவுருவ சிலைக்கு ஆண்டுதோறும் தை ஐந்தாம் நாள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் நேற்றைய தினம் தை மாதம் ஐந்தாம் தேதியை முன்னிட்டு அன்னாரது தெருவுருவ சிலைக்கு ஈரோடு மாவட்ட ஆட்சியர்ச. கந்தசாமி அவர்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து அங்கு வள்ளி கும்மியாட்டம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே இ பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி சி சந்திரகுமார், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏஜி வெங்கடாசலம், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் இ ஆர் ஈஸ்வரன், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், அணை கண்காணிப்பு பொறியாளர் கோபி செயற்பொறியாளர் திருமூர்த்தி, ஈரோடு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ. சுகுமார், உதவி செயற்பொறியாளர் உதயகுமார், பவானி நகர் மன்ற தலைவர் சிந்துரி இளங்கோ, ஈரோடு வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள், காலிங்கராயர் வாரிசுதாரர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

திருச்சி. ஜன.20–

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஜனவரி2026 ம் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 23.01.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் விவசாயிகள், விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு நீர்ப்பாசனம், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண்மை சம்மந்தப்பட்ட கடனுதவிகள் மற்றும் விவசாய மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் குறித்து நேரிலோ, மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் விவசாயப் பெருங்குடி மக்கள் இவ்வாய்ப்பினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.



திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டார். அருகில் துணை ஆட்சியர் பாரூக் உள்ளார்.

# ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் பிரதமருக்கு கடிதம் எழுதியதை வரவேற்கிறோம்: ஈழத்தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பு

சென்னை: ஜன.20–

ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் பிரதமருக்கு கடிதம் எழுதியதை வரவேற்கிறோம் என ஈழத்தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இலங்கையில் அரசமைப்பு சீர்திருத்தங்களால் தமிழ் சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இலங்கையில் உள்ள தமிழ்ச் சமூகத்தின் நலன் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான ஆழ்ந்த கவலைக்குரிய ஒரு விஷயம் குறித்து இந்தியப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். ஆழமான வரலாற்று, கலாச்சார மற்றும் உணர்வுப் பூர்வமான பிணைப்புகளின் காரணமாக, இலங்கையில் உள்ள தமிழர்களின் உரிமைகளையும், எண்ணங்களையும் நிலைநிறுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது என்றும், தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில், இந்தியா மற்றும் இலங்கையில் உள்ள மரியாதைக்குரிய தமிழ்த் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், இலங்கையில் முன்மொழியப்பட்ட புதிய அரசியலமைப்பு தொடர்பான பிரச்னை குறித்து இந்தியப் பிரதமரின் மேலான கவனத்திற்குக் கொண்டுவருவது தனது கடமை என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழலில், இந்திய அரசால் பூட்டானில் ஏற்பாடு செய்யப்பட்ட 1985 அமைதிப் பேச்சுவார்த்தைகளின் போது, தமிழ் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட திம்பு கோட்பாடுகளில் (Thimpu Principles) குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளையே, தற்போது பெறப்பட்டுள்ள கோரிக்கைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும், அந்த வகையில்,

* இலங்கைத் தமிழர்களுக்கான ஒரு தனித்துவமான தேசத்தை அங்கீகரித்தல் (தமிழர் தேசியம்);
* வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாக ஏற்றுக்கொள்வது (தமிழர் தாயகம்);
* தமிழ் தேசத்திற்கான தன்னாட்சி உரிமையை உறுதிப்படுத்துதல்(தமிழர் தன்னாட்சி உரிமை); மற்றும்
* மலையகத் தமிழர்களுக்கான முழு குடியுரிமை உரிமைகள் உட்பட, அனைத்து குடிமக்களுக்கும் சமத்துவத்தையும், பாகுபாடின்மையையும் உறுதிசெய்யும் ஒரு கூட்டாட்சி ஆட்சி முறையை நிறுவுதல்;

போன்றவற்றையே இந்தக் கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியிருந்தது.

இந்த நிலையில், ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் பிரதமருக்கு எழுதிய கடிதத்தை வரவேற்கிறோம் என ஈழத்தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. மேலும், தூதரக உறவுகளை பயன்படுத்தி இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு முதலமைச்சர் ஜன.11ல் கடிதம் எழுதியிருந்தார். ஈழத் தமிழரின் அரசியல் தீர்வுக்காக தமிழக அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும். தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் முன்னெடுத்து வரும் அயலக தமிழர் மாநாடு பாராட்டுக்குரியது என தெரிவித்திருந்தனர்.

# மத்திய அமைச்சரும் தமிழக பாஜக தேர்தல் பொறுப்பாளருமான பியூஷ் கோயல் 3 நாள் பயணமாக தமிழகம் வருகிறார்!!

செங்கல்பட்டு: ஜன.20–

மத்திய அமைச்சரும் தமிழக பாஜக தேர்தல் பொறுப்பாளருமான பியூஷ் கோயல் 3 நாள் பயணமாக தமிழகம் வருகிறார். மதுராந்தகத்தில் ஜனவரி 23ல் பிரதமர் மோடி பங்கேற்கும் என்.டி.ஏ. கூட்டணி பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. பிரதமர் மோடி பொதுக்கூட்டத்துக்கு முன்னதாக ஜனவரி 21ம் தேதி தமிழகம் வருகிறார் பியூஷ் கோயல். ஜனவரி 22ம் தேதி என்.டி.ஏ. கூட்டணியில் மற்ற கட்சிகள் கூட்டணி ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. 22ம் தேதி கூட்டணி ஒப்பந்தம் கையெழுத்தான பின், ஜன.23ல் பொதுக்கூட்ட மேடையில் கூட்டணி தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

# ஒண்டி குப்பத்தில் கஞ்சா போதையால் இரண்டு இளைஞர்களை அடித்து கொன்ற சம்பவத்தை அடுத்து அதே பகுதியில் சாலையோரத்தில் கஞ்சா செடி வளர்ந்திருப்பதாக புகார்

## போலீசார் பிடுங்கி சென்று விசாரணை

திருவள்ளூர் ஜன 20 : திருவள்ளூர் அடுத்த ஒண்டி குப்பத்தில் கடந்த இரண்டு தினங்களுக்கு கஞ்சா போதை ஆசாமிகள் நான்கு பேர் சேர்ந்து பார்த்திபன் மற்றும் சுகுமார் ஆகிய இரண்டு இளைஞர்களை கல்லால் அடித்து கொண்ட சம்பவம் நாட்டையே உலுக்கியது. ஒண்டிக்குப்பம் பகுதியில் இளைஞர்கள் அதிக அளவில் கஞ்சா போதைக்கு அடிமை ஆவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டினர். மாணவர்கள் முதல் இளைஞர்கள் அனைவரும் இந்த கஞ்சா போதைக்கு அடிமையாகி சீரழிந்து வருவதாகவும் காவல் துறை கண்டு



கொள்வதில்லை எனவும் அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டினர்.

இந்த வழக்கில் நான்கு பேரை கைது செய்தனர். இந்த அதிர்ச்சி சம்பவம் இன்னும் யாருடைய மனதில் இருந்தும் அகலாத நிலையில் அதே ஒண்டிகுப்பம் பகுதியில் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து 500 மீட்டர் தூரத்தில் திருவள்ளூர் பூந்தமல்லி நெடுஞ்சாலை பகுதியில் கஞ்சா செடி இருப்பதாக காவல்துறையினருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து விரைந்து வந்த போலீசார் சாலையோரம் ஒரு அடிக்கு வளர்ந்திருந்த கஞ்சா செடியை அங்கிருந்து அப்புறப்படுத்தி எடுத்து சென்றனர். கஞ்சா செடியை யாரேனும் வேறு எங்காவது வளர்த்து வருகிறார்களா? என்றும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மணவாள நகர் போலீசார் ஒண்டிக் குப்பம் ஆற்றங்கரை ஓரம் பகுதியிலும் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் மதுவிலக்கு வழக்குகளில் சம்பந்தப்பட்டு பறிப்பிழப்பு செய்யப்பட்ட வாகனங்கள் வரும் 29 ம் தேதி ஏலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தகவல்



திருவள்ளூர் ஜன 20 :

திருவள்ளூர் மாவட்டத்தில் மதுவிலக்கு அமல் பிரிவு மற்றும் மாவட்ட காவல் நிலையங்களில் மதுவிலக்கு வழக்குகளில் சம்பந்தப்பட்டு பறிப்பிழப்பு செய்யப்பட்டுள்ள 44 வாகனங்களில் 38 இரு சக்கர வாகனங்கள், 02 மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் 04 நான்கு சக்கர வாகனங்களை அரசாணை எண். நி.ளி.விவ.ழிஷீ.41 உள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (ஷீமிமிமி) துறை நாள்.21.08.2024. மற்றும் திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் படி வருகின்ற 29.01.2026 தேதியில் காலை 10 மணி அளவில் திருவள்ளூர் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள ஆயுதப்படை மைதானத்தின் அருகே 44 வாகனங்கள் ஏலம் விடப்பட உள்ளது. வாகனங்களை ஏலம் கேட்க வருபவர்கள் முன் வைப்பு கட்டணத் தொகையாக இருசக்கர வாகனங்களுக்கு ரூபாய்.1,000, மூன்று சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனத்திற்கு ரூபாய்.5,000 செலுத்த வேண்டும்.

அதற்கான டோக்கன் காலை 08.00 மணி முதல் 10.00 மணி வரை வழங்கப்படும். வாகனத்தை ஏலம் எடுத்தவர்கள் ஏலம் கேட்ட தொகையுடன் இருசக்கர வாகனத்திற்க்கு அரசு விற்பனை வரி 12% மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனத்திற்கு 18% உடனடியாக செலுத்தி விட வேண்டும். வாகனத்தின் விபரம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச மதிப்பீட்டு தொகை திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக தகவல் அறிவிப்பு பலகையில் ஒட்டி வைக்கப்பட்டுள்ளது.

வாகனத்தின் உரிமையாளர்கள் உரிமையாளருக்கான பதிவுச்சான்று ஆதார் கார்டு கொண்டு வரவேண்டும். மற்றும் பொது ஏலத்தில் கலந்து கொள்ள வருபவர்கள் ஆதார் கார்டு,அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு அடையாள அட்டை தவறாமல் கொண்டு வரவேண்டும். ஏலத்தில் கலந்து கொண்டு வாகனம் எடுக்காதவர்களுக்கு முன் வைப்பு கட்டணத் தொகை ஏலத்தின் முடிவில் திருப்பித் தரப்படும் என திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேகானந்த சுக்லா தெரிவித்துள்ளார்.

# மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.



சேலம். ஜன.20–

சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் (19.01.2026) நடைபெற்றது. பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும், குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண்டும் வராத வகையில் மனுவின் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப் பட்டுள்ளது.

அதனடிப்படையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல், சாதிச்சான்று, வேலை வாய்ப்பு, வங்கிக்கடன்கள், கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 326 மனுக்கள் வரப்பெற்றன.

அதனைத் தொடர்ந்து தாட்கோ மூலம் தூய்மைப் பணியாளர்கள் நலவாரியத்தின் கீழ் உறுப்பினர்களாக்கப்பட்ட தூய்மை பணியாளர்களின் குழந்தைகள் 10 வகுப்பு மற்றும் 11ஆம் வகுப்பு பயில்பவர்களுக்கு தலா ரூ.1,000 மும், 12 ஆம் வகுப்பு பயில்பவர்களுக்கு தலா ரூ.1,500 என 8 மாணாக்கர்களுக்கு ரூ.9,000 க்கான கல்வி உதவித் தொகைக்கான காசோலை வழங்கப்பட்டது. மேலும், மாற்றுத்திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி மனுக்களை வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தின் தரைத் தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடத்தப்பட்டு வரும் குறைதீர் முகாமில் வீட்டுமனைப் பட்டா, உதவி உபகரணங்கள், பராமரிப்பு உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை கள் குறித்து அளிக்கப்பட்ட 10 மனுக்களைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா. ரவிக்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.விவேக் யாதவ் இ.ஆ.ப., மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் நல அலுவலர் திரு.சின்னுசாமி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.என்.ஜெயக்குமார், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திருமதி ஜானகி, தாட்கோ மாவட்ட மேலாளர் திருசுசக்திவேல், திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலன்) திருமதி சுகந்தி பரிமளம்,மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.கு.மோகனசுந்தரம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி செண்பகவள்ளி உள்ளிட்ட அரசுத்துறை முதன்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்.






ஈரோடு, ஜன.20–

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் (19.01.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விதவை உதவித்தொகை, கருணை அடிப்படையில் வேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், விலையில்லா தையல் இயந்திரம், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 175 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.சாந்த குமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு.செல்வராஜ், மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மை யினர் நல அலுவலர் திரு.முரளி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.மகேஸ்வரி உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈஷா மஹாசிவராத்திரியை முன்னிட்டு ஆதியோகி ரத யாத்திரை: வேலூருக்கு வரும் 22ஆம் தேதி வருகை




வேலூர்: ஜன.20–

ஈஷா மஹாசிவராத்திரி விழாவை முன்னிட்டு, தென்கைலாய பக்திப் பேரவை சார்பில் ‘ஆதியோகி ரத யாத்திரை’ தமிழ்நாடு முழுவதும் உற்சாகத்துடன் நடைபெற்று வருகிறது. அதன்படி ஆதியோகி ரத யாத்திரை வேலூர் மாநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வரும் 22 மற்றும் 23 ஆகிய 2 நாட்கள் நடைபெற உள்ளது.

இது தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு வேலூர் முத்தண்ணா நகரில் அமைந்துள்ள ஈஷா யோக மையத்தில் (19/01/2026) நடைபெற்றது. இதில் ரத்தினகிரி அலங்கார் உரிமையாளர் வேலூர் ஒருங்கிணைப்பாளர் ஸி.வெங்கடசுப்பு பங்கேற்று பேசினார். அவருடன் தென்கைலாய பக்தி பேரவையின் தன்னார்வலர்கள் சொக்கலிங்கம், சரவணன், மணிவண்ணன் சதீஷ் மற்றும் மூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

ஈஷாவில் மஹாசிவராத்திரி விழா வரும் பிப்ரவரி 15ஆம் தேதி கோலாகலமாக கொண்டாடப் பட உள்ளது. இதில் பங்கேற்க பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கும் விதமாகவும், கோவைக்கு வந்து ஆதியோகியை நேரில் தரிசிக்க முடியாத பக்தர்கள் தங்களது ஊர்களிலேயே தரிசனம் செய்வதற்காகவும் இந்த ரத யாத்திரை நடத்தப்படுகிறது.

தமிழகத்தின் நான்கு திசைகளிலும் பயணிக்கும் 4 ஆதியோகி ரதங்களை தமிழ்நாட்டின் பாரம்பரிய ஆதீனங்களின் குருமகா சந்நிதானங்கள் தொடங்கி வைத்து அவர்களின் அருளாசியினை வழங்கியுள்ளனர். அந்த வகையில் தமிழகத்தின் கிழக்கு மற்றும் மேற்கு மண்டலத்திற்கான ஆதியோகி ரத யாத்திரையை, கோவையில் உள்ள ஆதியோகி வளாகத்தில் கடந்த டிசம்பர் 17 ஆம் தேதி, தவத்திரு பேரூர் ஆதீனம் சாந்தலிங்க மருதாசல அடிகளாரும், தவத்திரு சிரவை ஆதீனம் குமரகுருபர சுவாமிகளும் தொடங்கி வைத்தனர்.

தெற்கு மண்டலத்திற்கான ரத யாத்திரையை டிசம்பர் 23ம் தேதி, மயிலாடுதுறையில் தருமபுரம் ஆதீனத்தின் 27வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தொடங்கி வைத்தார். அதேபோன்று வடக்கு மண்டலத்திற்கான ரத யாத்திரையை, காஞ்சிபுரத்தில் நடைபெற்ற விழாவில், தொண்டை மண்டல ஆதீனத்தின் 234வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ திருச்சிற்றம்பல ஞானப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் கடந்த டிசம்பர் 26ம் தேதி தொடங்கி வைத்தார்.

இந்தாண்டு ஆதியோகி ரத யாத்திரை தமிழ்நாடு முழுவதும் உள்ள பாடல் பெற்ற திருத்தலங்கள் வழியாக நடைபெறுகிறது. இதில் குறிப்பாக வேலூரை உள்ளடக்கிய தொண்டை மண்டலப் பகுதிகளில் அமைந்துள்ள 20க்கும் மேற்பட்ட பாடல் பெற்ற திருத்தலங்கள் வழியாக இந்த யாத்திரை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

அதன்படி வரும் ஜன 22, 23 ஆகிய 2 நாட்கள், வேலூர் மாநகரப் பகுதிகளான கருகம்பத்தூர், கொணவட்டம், பொய்கை, அரியூர், தொரப்பாடி, அடுக்கம்பாறை, சாய்நாதபுரம், சங்கரன்பாளையம், வேலப்பாடி, காந்திசிலை, மண்டித்தெரு, சத்துவாச்சேரி, காட்பாடி உள்ளிட்ட பகுதிகள் வழியாக ஆதியோகி ரத யாத்திரை நடைபெற உள்ளது.

வேலூரை அடுத்து குடியாத்தம், கே.வி.குப்பம் வழியாக பயணித்து ஜன.25ஆம் தேதி காஞ்சிபுரம் சென்றடைய உள்ளது. அடுத்து ஆற்காடு, செஞ்சி வழியாகப் பயணித்து ஜன.29ஆம் தேதி திருவண்ணாமலை சென்றடையும் ரதம் அதன் பின்பு திண்டிவனம், புதுச்சேரி மற்றும் வில்லியனூர் பகுதிகளில் தொடர உள்ளது.

கோவையில் நடைபெறும் ஈஷா மஹாசிவராத்திரி விழா தமிழகம் முழுவதும் 60க்கும் மேற்பட்ட இடங்களில் நேரலை செய்யப்பட உள்ளது. அந்த வகையில் வேலூரில், வேலூர் மாநகராட்சி அலுவலகத்திற்கு அருகில் அமைந்துள்ள தண்டபாணி முதலியார் மஹாலில் ஈஷா மஹாசிவராத்திரி விழா நேரலை செய்யப்பட்டு கொண்டாடப்பட உள்ளது.

ஆதியோகி ரதங்கள், 7 அடி உயரமுடைய ஆதியோகி திருவுருவச் சிலையுடன் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அமைக்கப்பட்ட மொத்தம் 4 ரதங்கள், தமிழ்நாட்டின் நான்கு திசைகளிலும் யாத்திரை மேற்கொண்டு வருகின்றன. இந்த ரதங்கள், மஹாசிவராத்திரி வரையிலான இரண்டு மாத காலத்தில், 1,000க்கும் மேற்பட்ட கிராமங்கள் மற்றும் 250க்கும் மேற்பட்ட பாடல் பெற்ற சிவத்தலங்கள் வழியாக சுமார் 30,000 கிலோமீட்டர் பயணிக்க உள்ளன.

ஆதியோகி ரதங்கள் பயணிக்கும் இடங்களில், அங்குள்ள ஆதீனங்கள், முக்கிய பிரமுகர்கள், சிவனடியார்கள் மற்றும் பொதுமக்கள் பலர் சிறப்பான வரவேற்பை வழங்கி வருகின்றனர். ஆதியோகிக்கு விருப்பமுள்ள மக்கள் தீபாராதனை, மலர்கள், பழங்கள் மற்றும் நைவேத்தியங்களை அர்ப்பணிக்கலாம்.

இதனுடன், ‘சிவ யாத்திரை’ எனும் பாதயாத்திரையை சிவாங்கா பக்தர்கள் ஆண்டுதோறும் மேற்கொண்டு வருகின்றனர். தமிழ்நாடு, தெலங்கானா மற்றும் கர்நாடகாவிலிருந்து, ஆதியோகி சிவன் திருவுருவம் தாங்கிய தேர்களை இழுத்தபடி அவர்கள் வருகின்றனர். அத்துடன், 63 நாயன்மார்களின் திருவுருவங்களைத் தாங்கிய ஒரு தேருடன் அடியார்கள் பாதயாத்திரையாக கோவை ஆதியோகி வளாகத்திற்கு வருகை தர உள்ளனர்.

# பாமக எங்களுக்கே சொந்தம்: சென்னை ஐகோர்ட்டில் ராமதாஸ் வழக்கு

சென்னை, ஜன.20–

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாசுக்கும் அவரது மகன் அன்புமணிக்கும் இடையே மோதல் நீடித்து. இருவரும் கட்சிக்கு உரிமை கொண்டாடி வருவதால், பாமகவினர் மத்தியில் குழப்பம் ஏற்படுள்ளது. கடந்த டிசம்பர் இறுதியில் சேலத்தில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் பாமகவின் தலைவராக ராமதாஸ் தேர்வு செய்யப் பட்டார். மேலும், அன்புமணியின் பதவிக் காலம் மே 29 ஆம் தேதியுடன் முடிவடைந்துவிட்டதாகவும் தேர்தல் கூட்டணியை முடிவு செய்யவும் தேர் தலில் வேட்பாளர்களைத் தேர்வு செய்யவும் ராமதாசுக்கு முழு அதிகாரம் வழங்கியும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது. எனினும், ஆவணங்களின் அடிப் படையில் அன்புமணி தரப்புக்கே ஆதரவாக தேர்தல் ஆணையம் இருக்கிறது. இதற்கு எதிராக ராமதாஸ் டெல்லி ஐகோர்ட்டை நாடிய நிலையில் சென்னை ஐகோர்ட்டில் வழக்குத் தொடர அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, சென்னை ஐகோர்ட்டில் ராமதாஸ் நேற்று வழக்குத் தொடர்ந்துள்ளார். பாமக தங்களுக்கே சொந்தம், கட்சியில் தனக்கே முழு அதிகாரம் என்று உத்தரவிடக் கோரி ராமதாஸ் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். பாமகவில் கட்சியை கைப்பற்ற ராமதாஸ் அன்புமணி இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது பாமகவினர் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.”,

# மெட்ரோ ரெயில்களில் திடீர் சோதனை நடத்த சென்னை உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு

சென்னை மெட்ரோ ரெயில்களில் முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இருக்கைகள் அவர்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய, மெட்ரோ ரெயில் நிர்வாகத்திற்கு சென்னை உயர் நீதிமன்றம் சில அதிரடி உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.வழக்கறிஞர் வி.பி.ஆர். மேனன் தாக்கல் செய்த பொது நல வழக்கில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மெட்ரோ ரெயில்களில் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு எனத் தனியாக இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருந்தாலும், பெரும்பாலும் இளைஞர்களும் மற்ற பயணிகளும் அந்த இருக்கைகளை ஆக்கிரமித்துக் கொள்வதாகப் புகார்கள் எழுந்தன.இது தொடர்பாகத் தொடரப்பட்ட பொதுநல வழக்கு இன்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது, மெட்ரோ ரயில்களில் அதிகாரிகள் அவ்வப்போது ‘திடீர் சோதனை’ நடத்த வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய பயணிகளுக்கான இருக்கைகளில் மற்றவர்கள் அமர்ந்திருக் கிறார்களா என்பதை அவர்கள் கண்காணிக்க வேண்டும் என்றும், தகுதியற்ற நபர்கள் அந்த இருக்கைகளில் அமர்ந்து கொண்டு, முதியோர்களுக்கோ அல்லது மாற்றுத்திறனாளிகளுக்கோ இடம் தர மறுத்தால், அவர்கள் மீது அபராதம் விதிப்பது உள்ளிட்ட கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், முன்னுரிமை இருக்கைகள் யாருக்கானவை என்பது குறித்த அறிவிப்புகளை ரெயில்களுக்குள்ளும், நிலையங்களிலும் தெளிவாகத் தெரியும்படி வைக்க வேண்டும். ஒலிபெருக்கி மூலமாகவும் பயணிகளுக்குத் தொடர்ந்து அறிவுறுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரெயிலில் இருக்கும் பாதுகாப்பு ஊழியர்கள், ஒவ்வொரு நிறுத்தத்திலும் முதியோர்கள் ஏறும் போது அவர்களுக்கு இருக்கைகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும், உடல் ரீதியான சவால்களைக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை அளிப்பது ஒரு நாகரீகமான சமூகத்தின் கடமை என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.மேலும், மெட்ரோ நிர்வாகம் இதனைச் சரியாகக் கண்காணிக்கத் தவறினால், சட்டப்படியான நடவடிக்கைகளைச் சந்திக்க நேரிடும் என்றும் நீதிமன்றம் எச்சரித்துள்ளது.”,

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421